**வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம் 2022/2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியத்தின் (“கம்பனி”) 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2008 இன் 10 ஆம் இலக்க முத்திரை தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (திருத்தப்பட்டது) | கம்பனியின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தில் முத்திரை கழிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் பரிந்துரையைப் பெற்ற பின்னர் கம்பனி பதிவு செய்யும் செயன்முறையில் உள்ளது. | சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்கள் மற்றும் அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான (SOEs) செயற்பாட்டு கையேடு | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | செயற்பாட்டு கையேட்டின் 3.2 (i) ஆம் பந்தி | படிகள், ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய நிதி உதவிகளின் கொடுப்பனவிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அத்தகைய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 283,906, ரூபா 675,000 மற்றும் ரூபா 119,000 தொகைகள் முறையே புகையிரத பருவகால பயணச்சீட்டுக்களின் கொள்வனவு, ஊக்குவிப்பு கொடுப்பனவு மற்றும் ஊழியர்களின் ஆயுள் காப்புறுதி பங்களிப்புக்களிற்காக செலவிடப்பட்டிருந்ததை கணக்காய்வு அவதானித்துள்ளது. | அந்தக் கொடுப்பனவுகள் கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றன, மேலும், இந்த வசதி ஊழியர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் உதவுகிறது. | சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |
| (ii) | கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்களின் 4.2 (ஏ) வழிகாட்டல் | ஒரு குறிப்பிட்ட ஆண்டில் குறைந்தபட்சம் 04 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் கம்பனி ஒரு கூட்டத்தை மாத்திரமே நடாத்தியது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தை நடாத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பல குழு உறுப்பினர்கள் இதில் பங்கேற்க முடியாது என தெரிவிக்கப்பட்டது. | வழிகாட்டல்களுடன் இணங்குதல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான வியாபாரக் கடன்பட்டோர்களின் மொத்த மீதி ரூபா 16,383,978 ஆக இருந்ததுடன் அதில் 80 சதவீதம் 01 ஆண்டுக்கும் மேலாக அறவிடப்படாமல் நிலுவையாக இருந்தது. | கடந்தகால பெறவேண்டிய மீதிகளை அறவிடும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளோம். | நீண்ட கால நிலுவை மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான 04 ஆண்டுகளுக்கும் மேலாக ரூபா 96,410 தொகையான கடன்கொடுத்தோர் தீர்க்கப்படாமல் இருந்தது. | அந்த மீதிகள் வங்கி நடைமுறைக் கணக்கில் நேரடி வைப்பாக இனங்காணப்பட்டது. அந்த மீதிகள் தெளிவாக இனங்காணப்பட்ட பின்னர் கம்பனி எதிர்காலத்தில் இந்த விடயத்தைத் தீர்ப்பதற்காக நடவடிக்கையை எடுக்கும். | அந்த மீதிகளை தெளிவுபடுத்துவதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 காசு முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது வங்கி நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 72,500 கூட்டுமொத்தமான 04 தேறாத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் பதிவேடுகளில் 04 தேறாத காசோலைகளை இனங்காண்பதற்கு போதுமான தகவல்கள் காணப்படவில்லை, இந்த விடயம் கம்பனியின் கணக்காய்வுக் குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் அந்த தேறாத காசோலைகளை தெளிவாக இனங்கண்ட பின்னர் கம்பனி எதிர்காலத்தில் இந்த விடயத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கையை எடுக்கும். | தேறாததற்கான காரணங்களைக் கண்டறிந்து அதன் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இந்தப் பணத்தைப் பயன்படுத்துவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்படாமல் கடந்த பல ஆண்டுகளாக செயலற்ற வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 161,076 தொகை இடப்பட்டு இருந்தது. | கம்பனி இந்த விடயத்தை அமைச்சு உத்தியோகத்தர்களுடனும் கணக்காய்வுக் குழுக் கூட்டத்திலும் கலந்துரையாடியிருந்ததுடன் எதிர்காலத்தில் இந்த விடயத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கும். | கணக்கை செயற்படுத்துவதற்கு அல்லது மூடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 28,591,322 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 6,029,713 ஆக இருந்ததால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 34,621,035 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. பயிற்சி நிகழ்ச்சித்திட்ட வருமானம் மற்றும் வட்டி வருமானம் என்பன முறையே ரூபா 16,399,420 மற்றும் ரூபா 24,236,437 ஆல் அதிகரித்தமை இம் முன்னேற்றத்திற்கு பங்களித்த பிரதான காரணங்களாகும்.

**2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின உருப்படிகளின் பகுப்பாய்வானது அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | 2022/2023 ஆண்டிற்கானது | 2021/2022 ஆண்டிற்கானது | வேறுபாடுகள் [சாதகமானது (பாதகமானது)] | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| **வருமானம்** | | | | |
| கல்வி நிகழ்ச்சித்திட்ட வருமானம் | 18,616,720 | 21,421,100 | (2,804,380) | 13 |
| பொது தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட வருமானம் | 21,562,000 | 2,358,200 | 19,203,800 | 814 |
| வட்டி வருமானம் | 31,621,839 | 7,385,402 | 24,236,437 | 328 |
| **செலவினம்** | | | | |
| நேரடி கிரயம் | 6,686,429 | 4,683,247 | (2,003,182) | 43 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிகழ்ச்சித்திட்டமொன்றிற்கு ரூபா 1,000,000 விளம்பரம் மற்றும் ஊக்குவிப்புக் கட்டணங்களை அறவிடுதல் மற்றும் சான்றிதழ் கட்டணங்கள் மற்றும் வழங்கப்படும் சான்றிதழ்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் என்பவற்றின் மூலம் தற்போதுள்ள அத்தகைய 5 நிகழ்ச்சித்திட்டங்களை முறைமைப்படுத்தியதன் காரணமாக பொது தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்டங்களின் வருமானம் கடுமையாக அதிகரித்திருந்தது.

(ii) கம்பனி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிலையான வைப்புக்கள் மற்றும் அழைப்பு வைப்புக்கள் போன்றவற்றில் முதலீடு செய்த ரூபா 179,990,913 தொகையான அதன் குறுகிய கால மற்றும் நீண்ட கால முதலீடுகள் மீது ரூபா 31,694,289 தேறிய வட்டி வருமானத்தை ஈட்டியுள்ளது. இந்த தேறிய வட்டி வருமானம், மீளாய்வாண்டில் ஈட்டிய ரூபா 31,699,608 வரிக்கு முன்னரான இலாபத்தில் 99.98 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அதேநேரம் இந்த அதிகப்படியான பணத்தை கம்பனியின் முக்கிய குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்துவதற்கு கம்பனி அதன் கவனத்தை செலுத்தியிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டில் வளவாளர் கட்டணங்கள் மற்றும் எரிபொருள், தபால், உபசரணை, விளம்பரக் கிரயங்கள் போன்றன அதிகரித்ததன் காரணமாக நேரடிக் கிரயம் 43 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.